இயேசு ஜீவிக்கிறார் சுவிசேஷ ஊழியத்தின்

# வளரும் செடி

ஆண்டு சந்தா ரூ.25 தனிப்பிரதி ரூ.3

மலர் 18 ஜூன்–2026 மணம் 3



## நீ ஜெயிக்கிறாயா? ஜெயிக்கப்படுகிறாயா?

ஆசிரியர் : சகோ. ஜான் M. ஜெயராஜ்

# இதயந்திறந்து

## கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தர் ஒருவரே நமக்கு பரிகாரியாகவும், போதுமானவராகவும், சமயத்திற்கு ஏற்ற சகாயராகவும் இருக்கிறார். இம்மட்டும் அற்புதமாய் நடத்தினவர் இன்னமும் நடத்துவார்.

இனி காலம் செல்லாது எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாய், ஜெபம் பண்ணுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். விசுவாசத்தில் நிலைத்திருங்கள். கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் உறுதியாயிருங்கள். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

உன் சத்தம் எனக்கு இன்பம் என்றவர், உங்கள் ஜெப சத்தத்தையும், துதியின் ப களையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறார். உங்கள் மனதின் எண்ணங்களையும், விருப்பங்களையும் அவரிடத்தில் தெரியப்படுத்துங்கள். அவராலன்றி மீட்பும் விடுதலையும் இல்லையே. அன்னாளைப் போல உங்கள் இருதயத்தை அவர் பாதத்தில் ஊற்றிவிடுங்கள்.

மிஷனரி பணித்தளங்களுக்காக ஜெபியுங்கள். அந்தந்த பணித்தள விசுவாசிகள் கர்த்தருக்குள் வளர்ந்து பெருகவும். சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும் ஜெபியுங்கள். புதிய ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படவும், குடும்பங்கள் மனந்திரும்பி சபையில் இணையவும் ஜெபியுங்கள்.

நாங்களும் உங்களுக்காகவும், குடும்பத்தினருக்காகவும் தொழில் காரியங்களுக்காகவும் ஜெபிக்கிறோம். நாம் இணைந்து, ஒருவருக்கொருவர் ஜெபிக்கும்போது, கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். தொடர்ந்து ஜெபியுங்கள். ஜெபிக்கிறோம்.

தேவ கிருபை நம்மில் பெருகுவதாக!

ஜெபத்துடனும் அன்புடனும்

**சகோ. ஜான் *M.* ஜெயராஜ்**

## இயேசு ஜீவிக்கிறார் பணித்தள நற்செய்திக் கூட்டங்கள் - 2026

இடம்: **பெனியேல் புதூர்**

நாள்: **ஜூன் 20,21** (சனி, ஞாயிறு)

நேரம்: **தினமும் மாலை 6:30 மணி**

நற்செய்தியாளர்:

**Pr.A. எட்வர்ட் அல்சன்,**
திண்டுக்கல்.

**ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!**

இடம்: **தேவ நல்லூர்**

நாள்: **ஜூன் 27,28** (சனி, ஞாயிறு)

நேரம்: **தினமும் மாலை 6:30 மணி**

நற்செய்தியாளர்:

**சகோ.K. லேவன்சன்,** தூத்துக்குடி.

தொடர்புக்கு: சகோ. ஜான் M. ஜெயராஜ்
செல்: 94431 13292

E-mail: yesujeevikkirar @ gmail.com, Website: www.jesuslivesministries.in

<u>மன்னா:</u>

# நீ ஜெயிக்கிறாயா? ஜெயிக்கப்படுகிறாயா?

**ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக் கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன்,... அவன் என் குமாரனாயிருப்பான் (வெளி. 21:7)**

கிறிஸ்துவில் பிரியமானவர்களே,

உலகத்திலே உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள், நான் உலகத்தை ஜெயித்தேன் என்ற இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். ஒவ்வொரு மாதமும் கர்த்தர் தமது மன்னாவினால் நம்மை போஷித்துக் காப்பாற்றுகிறார். வார்த்தையினால் உண்டாகிற பெலனும், கிருபையும் நம்மைப் பெலப்படுத்துவதாக! அவர் தமது வசனத்தை அனுப்பி, அவர்களைக் குணமாக்கி அழிவுக்குத் தப்புவிக்கிறார்.

கடந்த மாதத்திலும், "உனக்கு நீயே கேடு உண்டாக்காதே" எனும் தலைப்பின் கீழாகக் கர்த்தர் நம்முடன் பேசினார். நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்பதற்கு ஏதுவாக இருந்திருக்கும் என்று விசுவாசிக்கிறேன். சிலர் கர்த்தர் உங்களோடு பேசின அனுபவங்களைச் சாட்சியாகப் பகிர்ந்து கொண்டீர்கள். மகிமை இயேசுவுக்கே. நாம் ஒருமித்து அவர் நாமத்தை உயர்த்துவோமாக!

இந்த மாதத்திலும், **"நீ ஜெயிக்கிறாயா"** அல்லது **"ஜெயிக்கப்படுகிறாயா?"** எனும் தலைப்பின் கீழாகப் பேசும்படி கர்த்தர் வந்திருக்கிறார். உலகத்தை ஜெயித்த இயேசு நம்மில் இருக்கும்போது, நாமும் ஜெயிக்கிறவர்களாகவே இருக்க வேண்டும். வெற்றி வாழ்க்கை செய்யும்படியே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

இந்த உலகமும், உலகத்தின் அனுபவங்களும் பலவிதங்களில் தினந்தோறும் நம்மோடு போராடிக்கொண்டிருக்கிறது. நாமும் இடைவிடாமல் போராடுகிறோம். போராடுவது நமக்கு தேவனால் நியமிக்கப்பட்ட பாதையாக இருக்கிறது. போராடுவது தவறல்ல. போராட்டத்தில் ஜெயிக்கிறோமா? அல்லது போராட்டம் நம்மை ஜெயிக்கிறதா? என்பதுதான் நாம் கவனிக்க வேண்டிய காரியம். வசனத்தைக் கவனியுங்கள்.

**1. யோபு 7:1 – பூமியிலே போராட மனுஷனுக்குக் குறிக்கப்பட்ட காலம் உண்டல்லவோ?**

**2. யோபு 14:16 – எனக்கு மாறுதல் எப்பொழுது வருமென்று எனக்குக் குறிக்கப் பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.**

அன்பு நேசப்பிள்ளைகளே! மனுஷீக பெலத்தினால் ஜெயிப்பது கூடாததுதான். தேவ பெலத்தினால் எல்லாம் கூடும். ஆகையால்தான் பவுல் கூறும்போது, "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு என்கிறார்" (பிலி. **4:13**). நான் எந்த நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்க கற்றுக்கொண்டேன் என்கிறார். நமக்கு ஜெயம் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த ஜெயத்தைப் பெற்றுக்கொள்வது எப்படி?

**1. நீதி. 21:31 – ஜெயமோ கர்த்தரால் வரும்.**

**2. 1யோ. 5:4 – தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்.**

தே. இ. பேசுவாரா!: விடுமுறை எடுத்து போனாயா? (2தீமோ. 4:5)

**3. 1யோ. 5:4 – நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.**

நாம் போராட்டங்களை ஜெயிக்கிறோமா? அல்லது போராட்டம் நம்மை ஜெயிக்கிறதா? என்பதுதான் நமக்கு முன்பாக வைக்கிற சவால். அனுதினமும் நாம் சந்திக்கிற போராட்டம் குறித்து கற்றுக் கொள்வோம். கர்த்தர் இயேசு நம்முடன் பேசுவாராக!

## 1. மாம்சத்தை ஜெயிக்கிறாயா?

**இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை; இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான்...(ஆதி. 39:9)**

யோசேப்பு எகிப்துக்கு கொண்டுபோகப்பட்டான். போத்திபார் என்னும் எகிப்து தேசத்தான் அவனை இஸ்மவேலரிடத்தில் விலைக்கு வாங்கினான். கர்த்தர் அவனோடே இருக்கிறார் என்றும், அவர் செய்கிற யாவையும் கர்த்தர் வாய்க்கப் பண்ணுகிறார் என்றும், அவன் எஜமான் கண்டு, யோசேப்பினிடத்தில் தயவுவைத்து, அவனை தனக்கு ஊழியக்காரனும் விசாரனைக்காரனுமாக்கினான். தனக்கு உண்டான யாவற்றையும் அவன் கையில் ஒப்புவித்தான்.

யோசேப்பு அழகான ரூபமும் சௌந்தரிய முகமும் உள்ளவனாயிருந்தான். எஜமானின் மனைவி அவன் மேல் கண்போட்டு, தன் ஆசைக்கு இணங்கும்படி அவனைத் தொந்தரவு செய்தாள். அவனோ அவளுடன் இருக்க சம்மதிக்கவில்லை.

அன்பு நேசப்பிள்ளைகளே! கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனாலும் நாம் மாம்ச சரீரத்தில் இருக்கிறபடியினால் அவ்வப்போது போராட்டங்கள் வந்து கொண்டுதான் இருக்கிறது. போராட்டங்கள் வரும்போதெல்லாம் அதை ஜெயிக்க வேண்டும். சில அனுபவங்களைக் கவனியுங்கள்.

**1. 2சாமு. 3:39 – நான் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டவனாயிருந்தபோதிலும் நான் இன்னும் பலவீனன்.**

**2. யோபு. 14:22 – அவன் மாம்சம் அவனிலிருக்குமளவும் அதற்கு நோவிருக்கும்.**

**3. கலா. 5:17 – மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது.**

எனக்கன்பானவர்களே! உங்கள் வாழ்க்கையின் பாதை, குடும்பத்தில், வேலை ஸ்தலங்களில், பழகின மக்கள் மத்தியில் இப்படி சோதனைகள் வருவதற்கு வாய்ப்புகள் உண்டு. கிறிஸ்துவின் பலனால் அவைகளை ஜெயிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம்.

யோசேப்பு எஜமானின் மனைவியினிடத்தில் பேசும்போது **"எஜமானுக்கு விரோதமாய்"** என்று சொல்லாமல், தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி? என்கிறான். அப்படியானால் அவன் இருதயம் எப்போதும் தேவனோடு

இணைந்திருந்தது. அதினால்தான் தான் மாம்சத்திற்கு விரோதமான செயல் உண்டான போது அதை ஜெயிப்பதற்குரிய பலம் அவனுக்கு உண்டானது.

மாம்சத்தில் வெற்றியில்லாத ஒருவனை குறித்து நீதிமொழியில் வாசிக்கின்றோம். ஒரு புத்தியீன வாலிபனைக் கண்டு அவனைக் கவனித்தேன். அவன் மாலைமயங்கும் அஸ்தமன நேரத்தில், வேசி இருக்கும் வீட்டு வழியாக நடந்து போனான். அவள் அவனைப் பிடித்து, முத்தஞ் செய்து, முகம் கோணாமல் அவனைப் பார்த்து, வா விடியற்காலம் வரைக்கும் சம்போகமாயிருப்போம், இன்பங்களிலே பூரிப்போம் என்று சொல்லி, தன் இனிய சொற்களால் அவனை வசப்படுத்தி, இணங்கப் பண்ணினாள். உடனே அவன் அவள் பின்னே சென்றான்... (நீதி. 7:7–23)

அன்பு நேசப்பிள்ளைகளே! இந்தப் புத்தியீன வாலிபனைக் கவனியுங்கள். மாம்சத்தில் வெற்றி இல்லாததினால், அவன் ஒரு மாடு அடிக்கப்படும்படி செல்வது போல செல்லுகிறான். அதின் முடிவு வேதனையும் பரிதாபமுமாகவே இருக்கும்.

மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளை சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம், அது தேவனுக்கு விரோதமான பகை. மாம்சத்திற்குட்பட்டவர்கள் தேவனுக்கு பிரியமாயிருக்க மாட்டார்கள். மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள் ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள். நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்? நீங்கள் மாம்சத்தை ஜெயிக்கிறவர்தானா? அல்லது மாம்சம் உங்களை ஜெயிக்கிறதா? நீங்கள் ஜெயமாய் வாழ்வதே தேவனுக்குப் பிரியம்.

## 2. நினைவுகளை ஜெயிக்கிறாயா?

**நாகமான் கடுங்கோபங்கொண்டு, புறப்பட்டுப்போய்; எலிசா வெளியே வந்து நின்று, தன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை தொழுது, தன் கையினால் அந்த இடத்தை தடவி, இவ்விதமாய்க் குஷ்டரோகத்தை நீக்கிவிடுவான் என்று எனக்குள் நினைத்திருந்தேன்... ( 2இரா. 5:11)**

சீரிய படைத்தலைவனாகிய நாகமான் என்பவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும், எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான். அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான். சீரியாவிலிருந்து தண்டுகள் புறப்பட்டு, இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணைச் சிறைபிடித்துக் கொண்டுவந்திருந்தார்கள்; அவள் நாகமானின் மனைவிக்கு பணிவிடை செய்து கொண்டிருந்தாள். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து: என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசியினிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும். அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார் என்றாள்.

நாகமான் இந்த சிறுபெண்ணின் வார்த்தையின்படி புறப்பட்டு, சமாரியாவிலிருக்கிற எலிசாவின் வீட்டு வாசற்படியில் நின்றான். அப்பொழுது எலிசா: நாகமானிடத்தில் ஆள் அனுப்பி: நீ போய் யோர்தானில் ஏழுதரம் ஸ்நானம் பண்ணு; அப்பொழுது உன் மாம்சம் மாறி, நீ சுத்தமாவாய் என்றுச் சொல்லச் சொன்னான்.

நாகமான் கடுங்கோபங்கொண்டு, உக்கிரத்தோடே திரும்பிப் போனான்.

காரணம் அவன் நினைத்தபடி எலிசா செய்யவில்லை. நாகமானின் நினைவு அவனது விடுதலைக்கு தடையாக இருக்கிறது. அவனது ஊழியக்காரர்கள் அவனைச் சமாதானப்படுத்தி, யோர்தான் நதியில் இறங்க வைத்தார்கள். அவன் தேவனுடைய மனுஷன் வார்த்தையின்படியே யோர்தானில் ஏழுதரம் மூழ்கினபோது, அவன் மாம்சம் ஒரு சிறுபிள்ளையின் மாம்சத்தைப் போல மாறி, அவன் சுத்தமானான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! இங்கு நாகமானின் நினைவுகளை கவனியுங்கள். அவனது நினைவானது, அவனது விடுதலைக்குத் தடையாக இருக்கிறது. அவனது ஊழியக்காரரின் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, தனது நினைவை விட்டுவிட்டான். அதாவது தனது நினைவை அவன் ஜெயித்தான். அற்புத சுகத்தைப் பெற்றுக் கொண்டான். கண்டிப்பாக நினைவுகளை ஜெயிக்க வேண்டுமா என்கிற கேள்வி உண்டாகலாம். வசனங்களைக் கவனியுங்கள். கர்த்தர் பேசுகிறார், "என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல". ஏசா. 55:8

**1. 1சாமு. 13:12 – எண்ணி துணிந்து சர்வாங்க தகன பலியைச் செலுத்தினேன்.**

**2. யோபு 37:24 – தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிக்கிற எவர்களையும் கர்த்தர் மதிக்க மாட்டார்.**

**3. நீதி. 15:26 – துன்மார்க்கருடைய நினைவுகள் கர்த்தருக்கு அருவருப்பானவைகள்.**

**4. தானி. 7:28 – நான் என் நினை**வுகளால் கலங்கினேன்.

எனக்கன்பானவர்களே! தனது நினைவினால் ஜெயிக்கப்பட்ட ஒருவனையும் நாம் அறிந்து கொள்வோம். "தாவீதுக்கு பதினாயிரம், எனக்கோ ஆயிரம் கொடுத்தார்கள்." (1சாமு. 18:8). சவுலுக்குள் உண்டான இந்த நினைவு அவனை கொலைகாரனாக மாற்றுகிறது. தாவீதைக் கொலை செய்ய சுமார் பன்னிரெண்டு முறை பிரயாசப்படுகிறான். அதற்காகவே தன் மகளைத் தாவீதுக்கு மனைவியாக்குகிறான். சவுலின் நினைவு அவனை ஜெயித்ததினால், "தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான்." (1சாமு. 18:29)

நாம் நமது நினைவுகளையும், எண்ணங்களையும் ஜெயிக்க வேண்டும். அதுதான் நாம் வெற்றி வாழ்க்கை செய்வதற்கு அடையாளம். நீங்களும் நினைவுகளை ஜெயிக்கிறவர்தானா? அல்லது நினைவுகள் உங்களை ஜெயிக்கிறதா? தேவனின் பெலத்தினாலே நினைவுகளை மேற்கொள்ளுங்கள்.

## 3. சொன்னதை நிறைவேற்றுவதில் ஜெயிக்கிறாயா?

**யெப்தா தன் மகளைக் கண்டவுடனே, தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும், கலங்கவும் பண்ணுகிறாய்; நான் என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக் கூடாது என்றான்...(நியா. 11:35)**

கீலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான். அவன் பரஸ்திரீயின் குமாரன். கிலெயாத் அவனைப் பெற்றான். கிலெயாத்தின் மனைவியும் அவனுக்கு குமாரர்களைப் பெற்றாள்; அவன் மனைவிபெற்ற குமாரர் பெரியவர்களான பின்பு, அவர்கள் யெப்தாவை நோக்கி: உனக்கு எங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரம்

இல்லை; நீ அன்னிய ஸ்திரீயின் மகன் என்று சொல்லி அவனைத் துரத்தினார்கள். யெப்தா தன் சதோதரர்களை விட்டு ஓடிப்போய் தோப் தேசத்திலே குடியிருந்தான்.

சில நாளைக்குப் பின்பு, அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின் மேல் யுத்தம் பண்ணினார்கள். அப்பொழுது கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவினிடத்தில் வந்து, அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்களுக்குத் தலைவனாகவும், சேனாதிபதியாயிருக்கவும் வேண்டும். இதற்காக உம்மிடத்தில் வந்தோம் என்றார்கள். யெப்தாவும் அதற்குச் சம்மதித்து, அவர்களுக்குத் தலைவனானான்.

யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனைப் பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுத்தால், நான் சமாதானத்தோடு திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும். அதை சர்வாங்க தகன பலியாக செலுத்துவேன் என்றான். கர்த்தர் யுத்தத்தில் ஜெயம் கொடுத்தார். அவன் வெற்றி முழக்கத்தோடு வரும்போது, அவனது ஒரே மகள் அவனுக்கு எதிர் கொண்டு வந்தாள். யெப்தா தான் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படியே அவளுக்குச் செய்தான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! யெப்தா தனக்கு இருந்த ஒரே மகளையும், கர்த்தரிடத்தில் பண்ணின பொருத்தனையின்படி நிறைவேற்றினான். நாமும் சொன்ன வார்த்தையை, பொருத்தனையையை உடன்படிக்கையை நிறைவேற்றுவதில் எப்படி இருக்கிறோம் என்பதைச் சிந்தியுங்கள். வசனங்களைக் கவனியுங்கள்.

**1. லேவி. 22:10 – பொருத்தனையை மாற்றாமலும் வேறுபடுத்தாமலும் இருப்பானாக.**

**2. எண். 23:20 – கர்த்தர் ஆசீர்வதிக்கிறார், அதை நான் திருப்பக் கூடாது.**

**3. எண். 24:12 – கர்த்தரின் கட்டளையை மீறக் கூடாது.**

**4. பிர. 5:4 – நீதி தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக்கொண்டால், அதைச் செலுத்தத் தாமதியாதே.**

**5. ரோ. 14:22 – நல்லதென்று நிச்சயித்த காரியத்தில் தன்னை குற்றவாளியாக்காதவன் பாக்கியவான்.**

எனக்கன்பானவர்களே! தேவனோடு பண்ணின பொருத்தனையை மீறின ஒருவனையும் நாம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். யோனாவின் வாழ்க்கையில், கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி அவர்: நீ எழுந்து மகா நகரமாகிய நினிவேக்குப் போய், அதற்கு விரோதமாகப் பிரசங்கி" என்றார். அப்பொழுது யோனா கர்த்தருடைய சமூகத்தினின்று விலகி, தர்ஷீக்கு ஓடிப்போகும்படி கப்பல் ஏறினான். கர்த்தர் சமுத்திரத்தின் மேல் பெருங்காற்றை வரவிட்டார். கப்பல் உடையுமென்று நினைக்கத்தக்க பெரிய கொந்தளிப்பு உண்டாயிற்று. கப்பற்காரர் பயந்து யார் நிமித்தம் இந்த கொந்தளிப்பு என்று அறியும்படி சீட்டு போட்டார்கள். சீட்டு யோனாவின் பேருக்கு விழுந்தது. அவனை எடுத்து சமுத்திரத்தில் போட்டார்கள். சமுத்திரம் தன் மும்முரத்தைவிட்டு அமர்ந்தது. தேவன் ஆயத்தமாக்கின மீன் வயிற்றில் யோனா இராப்பகல் மூன்றுநாள் இருந்தான். வசனத்தைக் கவனியுங்கள்.

**சங். 15:4 – ஆணையிட்டதில் தனக்கு நஷ்டம் வந்தாலும் தவறாதிருக்கிறான்.**

யோனா தீர்க்கதரியாக இருந்தாலும், அவன் பண்ணின பொருத்தனையை நிறைவேற்றுவதில் சரியாக இல்லாததினால் மீன் வயிற்றில் போடப்பட்டான். நீங்களும்

மனதார, உங்கள் வாய்திறந்து சொன்ன காரியத்தை நிறைவேற்றுவதில் ஜெயிக்கிறீர்களா? அல்லது ஜெயிக்கப்படுகிறீர்களா? என்பதைப் புரிந்து, உணர்ந்து ஜெயம் எடுங்கள்.

## 4. கேடான ஆலோசனையை ஜெயிக்கிறாயா?

**தாவீதின் மனுஷர் அவனை நோக்கி: இதோ, நான் உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன்; உன் பார்வைக்கு நலமானபடி அவனுக்குச் செய்வாயாக என்று கர்த்தர் உன்னோடே சொன்ன நாள் இதுதானே என்றார்கள். (1சாமு. 24:4)**

சவுலுக்கு ஆயிரம் என்றும், தாவீதுக்குப் பதினாயிரம் என்றும் ஸ்திரீகள் பாடின நாள் முதற்கொண்டு, சவுல் தாவீதைக் காய்மகாரமாய்ப் பார்த்தான். தாவீதை கொன்று போடும்படி சுமார் பன்னிரெண்டு முறை பிரயாசப்பட்டான். கர்த்தர் தாவீதை, சவுலின் கையில் ஒப்புக்கொடுக்கவில்லை. உன் சத்துருவை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்று கர்த்தர் தாவீதுக்குச் சொல்லியிருந்தார்.

இந்த சூழ்நிலையில் தாவீதும் அவன் மனுஷரும் என்கேதி வனாந்தரத்தில் இருக்கும்போது, அவர்களைத் தேடி சவுலும் அவன் மனுஷனும் வருகிறார்கள். அங்கே ஒரு கெபி இருக்கிறது. அதிலே சவுல் மலஜலாதிக்குப் போனான். அந்தக் கெபிக்குப் பக்கத்தில்தான் தாவீதும் அவன் மனுஷரும் இருக்கிறார்கள். அப்பொழுதான் தாவீதின் மனுஷர் கர்த்தர் சொல்லியிருக்கிற வார்த்தையை நினைவுப்படுத்தி பேசுகிறார்கள்.

அன்பு நேசப்பிள்ளைகளே! காரியத்தையும் சூழ்நிலைகளையும் பணிக்கும்போது, கர்த்தர் தான் சத்துருவைத் தாவீதின் கையில் ஒப்புக்கொடுத்தது போலத் தெரிகிறது. ஆனாலும் தாவீது சொல்லுகிற வார்த்தையைக் கவனியுங்கள்.

**தாவீது தன் மனுஷரைப் பார்த்து: கர்த்தர் அபிஷேகம் பண்ணின என் ஆண்டவன் மேல் என் கையைப் போடும்ம்படியான இப்படிப்பட்ட காரியத்தை நான் செய்யாதபடிக்கு, கர்த்தர் என்னைக் காப்பாராக; அவர் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றான்.(1சாமு. 24:6)**

எனக்கன்பானவர்களே! சவுல் தான் உயிரோடிருந்த நாளெல்லாம் தாவீதுக்குச் சத்துருவாயிருந்தான். (1சாமு. 18:29) என்பது உண்மையானாலும், தாவீதின் மனதின் எண்ணங்களைக் கவனியுங்கள். சவுல் தன்னைக் கொலைசெய்யத் தேடுகிற மனிதன் என்பதைவிட, "சவுல் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்கிற சிந்தையே அதிகமாக இருந்தது. எனவேதான் மீண்டும் ஒருவிசை சவுலைக் கொலை செய்ய வாய்ப்பு கிடைத்த போதும் தாவீது சொல்வதைக் கவனியுங்கள்.

**தாவீது அபிசாயைப் பார்த்து: அவரைக் கொல்லாதே; கர்த்தர் அபிஷேகம் பண்ணுவித்தவர் மேல் தன் கையைப் போட்டு, குற்றமில்லாமற் போகிறவன் யார்? (1சாமு. 26:9)**

கேடான ஆலோசனையால் ஜெயிக்கப்பட்டு நஷ்டமடைந்த ஒருவனைப் பற்றியும் அறிந்து கொள்ளுவோம்.

தாவீதின் குமாரனாகிய அப்சலோமுக்குத் தாமார் என்னும் சவுந்தரியமுள்ள ஒரு சகோதரி இருந்தாள். அவள்மேல் தாவீதின் குமாரன் அம்னோன் மோகங்

கொண்டான். அவளுக்குப் பொல்லாப்பு செய்ய அம்னோனுக்கு வருத்தமாய்க் கண்டது. அம்னோனுக்குப் யோனதாப் என்னும் ஒரு சிநேகிதன் இருந்தான். அவன் மகா தந்திரவாதி.

இந்த யோனதாப் அம்னோனைப் பார்த்து ராஜகுமாரனாகிய நீ, நாளுக்குநாள் எதினாலே இப்படி மெலிந்து போகிறாய். எனக்குச் சொல்லமாட்டாயா என்றான். அதற்கு அம்னோன், நான் தாமாரின் மேல் ஆசை வைத்திருக்கிறேன் என்றான். அப்பொழுது யோனதாப் அம்னோனுக்கு, தாமரை அடைவதற்கான கேடான ஆலோசனை கொடுக்கிறான். அம்னோனும் அதை ஏற்றுக்கொண்டு, அதின்படி வியாதிக்காரனைப் போல நடித்து, தகப்பனாகிய தாவீதை ஏமாற்றி, தாமாரையும் கற்பழித்துவிட்டான். தன் சகோதரிக்கு நடந்த இந்தக் கொடுமை அப்சலோமின் நெஞ்சில் இருந்தது. அப்சலோம் சமயம் பார்த்து, தன் வேலைக்காரர் மூலமாக அம்னோனைக் கொன்று போட்டான். கேடான ஆலோசனைக்குச் செவிகொடுத்தவன் மடிந்து போனான்.

அன்பு நேசப்பிள்ளைகளே! நீங்களும் உங்கள் வாழ்க்கையின் பாதையில் மாம்சத்தையும், நினைவுகளையும், சொன்னதையும், கேடான ஆலோசனையையும் ஜெயிக்கிறீர்களா? அல்லது அதினால் ஜெயிக்கப்படுகிறீர்களா? ஜெயங்கொடுக்கிற தேவன் நம்மில் இருக்கிறபடியால் நாம் ஜெயிக்கும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம். ஜெபித்து ஜெயம் பெறுவோம். ஆமென்! அல்லேலூயா!!

## ஜெப சேனை ஜெபக் குறிப்புகள் [ஜூன் 2026]



**1. மத்திய, மாநில அரசுகளின் ஐக்கிய சேவைக்காக...**
**2. தேசத்தின் முப்படைத் தளபதிகள், வீரர்களுக்காக...**
**3. மத்திய, மாநில அரசுகள் மக்களின் நலனுக்காக செயல்பட...**
**4. தமிழகத்தில் தேவன் தந்துள்ள புதிய அரசுக்காக...**
**5. புதிய முதலமைச்சர், அமைச்சர், உறுப்பினர்களுக்காக...**
**6. புதிய கல்வியாண்டில் பிரவேசிக்கிற ஆசிரியர்கள், மாணவர்களுக்காக...**
**7. வட இந்திய மிஷனரி ஊழியங்கள், பள்ளி கல்லூரி நிர்வாகங்களுக்காக...**
**8. கர்த்தருடையவர்கள், கர்த்தருக்கு சாட்சியாக வாழ்ந்திட...**
**9. நமது இயேசு ஜீவிக்கிறார் ஊழியர்கள், ஊழியங்கள், விசுவாசிகளுக்காக...**
**10. நமது ஜெப சேனை, TV நிகழ்ச்சிகள், பத்திரிக்கை, புத்தக ஊழியங்களுக்காக...**

## நடப்புச் செய்திகள்

1. பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கு கடும் எதிர்ப்பு.
2. களக்காட்டில் குடியிருப்பு பகுதில் குரங்குகள் அட்டகாசம்.
3. கேரளாவில் புதிய முதல்வரான வி.டி. சதீசனுக்கு வாழ்த்துக்கள்.
4. நீட் தேர்வு கேள்வித்தாள் லீக்வுட் பெரும் அதிர்ச்சி.
5. ஆந்திரமாநில புட்டபர்த்தியில் விமான தொழிற்சாலைக்கான அடிக்கல் நட்டப்பட்டது.
6. ஜூன் 21-ஆம் தேதி நீட் மறுதேர்வு - ஒன்றிய அரசு.

குடிலிலுள்ள ஆட்டுக்குட்டி. (யோ. 10:11)

# தேவன் இப்படியும் பேசுவாரா!

## 1. புகழ்ச்சியைக் கேட்டு உயரமாகப் பறந்துவிடாதே!

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! வார்த்தையால் புகழுகிற மக்கள் பெருகியிருக்கிறார்களே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! இயேசு கழுதையின்மேல் பவனியாக வரும் போது, ஓசன்னா பாட்டுபாடிய மக்களே, அவனைச் சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும் என்றும் சத்தமிட்டார்கள். இதுதான் மனிதனின் நிலை. ஆகையால் மனிதரின் புகழ்ச்சியைக் கேட்டு உயரமாக பறந்து விடாதே! கீழே விழும்போது, உயரத்திற்கு ஏற்றபடி அடி பலமாக இருக்கும்" என்றார்.

**மனுஷனுக்கு அவனுக்கு உண்டாகும் புகழ்ச்சியே சோதனை...(நீதி. 27:21)**

## 2. பரிசுத்தம் உன் அழகிற்கு மெருகூட்டும்

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! பரிசுத்தமாய் வாழ்வதின் அவசியத்தைக் கற்றுத்தாரும் என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! கர்த்தர் முற்றிலும் அழகுள்ளவர். அவரது சாயலில் உருவாக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு அழகு உண்டு. அதே பிள்ளைகள் தங்கள் வார்த்தையிலும், வாழ்க்கையிலும் பரிசுத்தமாக வாழும்போது, அவர்களது அழகு மெருகூட்டப்படுகிறது. அதாவது முகத்தில் ஓர் பிரகாசம் உண்டாகும்." என்றார்.

**மோசே சீனாய்மலையிலிருந்து இறங்குகிற போது, தன்னோடே அவர் பேசினதினாலே தன் முகம் பிரகாசித்திருப்பதை அவன் அறியாதிருந்தான்... (யாத். 34:29)**

## 3. கசப்பான அனுபவம் வாழ்க்கையைச் சீர்ப்படுத்தும்:–

நேசப்பிள்ளை ஜெபிக்க வந்தார்கள். ஆண்டவரே! கசப்பான அனுபவங்கள் கடினமாக இருக்கிறதே என்று ஜெபித்தார்கள். அதற்கு நேசர், "என்பிள்ளையே! கசப்பான மருந்து உடலைச் சீர்ப்படுத்துவது போல, கசப்பான அனுபவங்கள் வாழ்க்கையைச் சீர்படுத்தும்" என்றார்.

**நான் உபத்திரவப்படுத்துவதற்கு முன் வழிதப்பி நடந்தேன். இப்பொழுதோ, உம்முடைய வார்த்தையைக் காத்து நடக்கிறேன். (சங். 119:67)**

# தூண்டில்

கிறிஸ்துவில் பிரியமானவர்களே! விடைகளை வெள்ளைத் தாளில் எழுதி, வருகிற 20ஆம் தேதிக்குள் எனக்குக் கிடைக்கும்படியாக அனுப்புங்கள். கடைசி இரண்டு கேள்விகளும் **ஏசாயா – எசேக்கியேல்** புஸ்தகங்களுக்கிடையே உள்ளது.

**ஜூன் 2026** **தூண்டில் போடுங்கள், வலை (Internet) விரிக்காதீர்கள்.**

1. தப்பி ஓடுகிறவர்களுக்கு எதைக்கொடுக்க எதிர்கொண்டு ஓடுங்கள்.
2. சமயத்துக்கு ஏற்றபடி நீ செய் – என்றது யார்?
3. என் ஜனத்தின் எதைச் சுமப்பீர்கள்?
4. எது எப்பொழுதும் என் கையில் இருக்கிறது?
5. நான் அவனை கெஞ்ச வேண்டியதாயிற்று – என்றது யார்?
6. நீ செய்தது போல நான் உனக்கும் செய்வேன் – என்றது யார்?
7. உனக்கு வெகுமானம் தருவேன் – என்றது யார்?
8. அவனை எங்கே கொண்டுபோகும்படி கட்டளையிட்டான்?
9. எங்கே உயிரோடே தள்ளப்பட்டார்கள்?
10. என் பிறகே வாருங்கள் – என்றது யார்?
11. எதை இனித் திறக்கமாட்டாதிருப்பாய்?
12. உன்னை விழுங்கினவர்கள் தூரமாவார்கள் – என்றது யார்?

## 2026 மே மாத மீன்கள்

1. ஏசா 22:16 – கர்த்தர்
2. 1சாமு. 10:14 – சவுன் சிறிய தகப்பன்
3. ஆமோஸ் 7:8 – கர்த்தர்
4. அப். 21:3 – சரக்குகளை
5. வெளி. 18:22 – கர்த்தர்
6. யோசு 9:19 – என் மதில்களை
7. சக. 8:23 – 10 மனுஷர்
8. சங். 119:95 – துன்மார்க்கர்
9. எசே. 39:8 – கர்த்தர்
10. ஒப. 10 –
11. பிர. 10:4 – இணங்குதல்
12. நீதி.18:3 – வெள்ளத்தை

## 2026 ஏப்ரல் மாதம் மீன் பிடித்தவர்கள்

01. Mrs.D. ஜெபக்குட்டி மோசஸ் – மருதகுளம்.
02. Mrs. ஜான்சி சந்தியா – மருதகுளம்.
03. Mrs. ஹெலன் சுவிட் – டோனாவூர்.
04. Mrs. ஷெர் சாம் – அரக்கோணம்.
05. Mrs. சுசிலா ஜெயக்குமார் – அரக்கோணம்.
06. Mrs. J. ஜான்சி – ஆனைமலை.
07. Mrs. அன்னத்தாய் ஆல்பட் – மெஞ்ஞானபுரம்.
08. Mrs. அன்னபாக்கியம் தினகரன் – மதுரை.
09. Mrs. செல்வி ஜேக்கப் – தென்காசி.
10. Mrs. ரோஸ்ன் கனகராஜ் – ஒடக்கரை
11. Sist. அஸ் குணசீ – சாயர்புரம்.
12. Mrs. குணசீ சுகந்தி – கோவை.

Registered News Paper
R.n.i. No : Tntam / 2004 / 12805. Postal Regn. No : Tvl / 005 / 2021 - 2023
Date of Publication : 01.06.2026



# இயேசு ஜீவிக்கிறார் வெளியீடுகள்

தேவ கிருபையினால் பாடல் CD–க்களும், புத்தகமும் வெளியிடக் கர்த்தர் உதவி செய்தார். ஜீவ கீதங்கள் பாடல்களும் மற்றும் புதிய புத்தகங்களும் வெளியிடப்பட்டுள்ளது. ஜெபத்துடன் பெற்று பயனடையுங்கள்.

**பதிவுத் தபால் அனுப்பிட செலவு தனி**

1. ஜீவ கீதங்கள் (ACD) (Vol : 1 to 24)
2. ஜீவ கீதங்கள் (VCD), MP3
3. கேட்கும் கிருபை
4. ஜீவ கீதங்கள் (220 + 35 பாடல்கள்)
5. தேவன் இப்படியும் பேசுவாரா! (Part 1-8)
6. நோவாவின் பேழை
7. வளரும் செடி
8. மனிதன்
9. வெற்றியுள்ளவன்
10. முதலாம் அற்புதம்
11. வாபனே நீ யார்?
12. என் இருதயத்திற்கு ஏற்றவனான தாவீது
13. ஜலத்தினின்று எடுக்கப்பட்டவன்
14. தேவன் தெரிந்த நாகமான்
15. ஊழியரே இது உங்களுக்காக (50 செய்திகள்)
16. டோனாவூரம்மா
17. நான் கண்ட சபேயு
18. ஜீவ விதைகள் (150 பிரசங்க குறிப்புகள்)
19. நகோமி
20. அந்த ராத்திரியிலே...

**JOHN M. JEYARAJ,**
178, Dohnavur Road, Mavadi - 627 107
Tirunelveli Dist., S. India
Phone : (04635) 210 691, Cell : 94431 13292
E-mail : yesujeevikkirar@gmail.com, Website : www.jesuslivesministries.in

Book Post

To

Owned & Published by : John M. Jeyaraj From 123-A, Dohnavur Road, Mavadi - 627107 - Tirunelveli District. Printed by Mr. S. Jairus Ponniah at Swarnapriya Printers, 35/16-A, Tiruchendur Road, Palayamkottai. Tirunelveli Dt. - 627 002. Editor : John M. Jeyaraj